முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.99/2011** **DW: 1** **22.04.2026**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியாகிய மு.கேசவன் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மு.கேசவன் | வயது | 69 |
| த/பெயர் | முருகன் | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | மங்களூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை**

என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மங்களூர் கிராமம் புல எண்.323/1ஏ 1 முழுவதும் 2ம் எதிர்வாதியின் அனுபவத்திலிருந்து வருகிறது என்றும் அவரது முன்னோர்களும் 80 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள் என்றும் 2ம் எதிர்வாதிக்கு உரிமையுடன் கூடிய எதிர்நிலை பாத்தியத்தை சித்தித்துள்ளது என்றால் சரிதான். நான் எதிர்நிலை பாத்தியத்தை கொண்டாடுவதால் எனக்கு சொத்தில் உரிமை இல்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்நிலை பாத்தியத்தை நிலைநாட்ட நான் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

வழக்குச் சொத்தை எனது தகப்பனார் காலத்தில் அனுபவித்தை காண்பிக்க நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த சொத்து எனக்கும் என் தந்தைக்கும் பாத்தியமில்லாததால், எதிர்நிலை பாத்தியம் கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல. இந்த சொத்திற்கும் வாதி குடும்பத்திற்கு 1985–ல் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாமல் அரசாங்கம் வழங்கிவிட்டது. மேற்படி பட்டாவை ரத்து செய்ய நான் ஏதேனும் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு தெரியாது. மேற்படி பட்டாவை ரத்துச் செய்ய உரிமையியல் நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை, தற்போதுதான் எனக்கு தெரியும். வழக்கு போடவேண்டும்.

வாதி தாக்கல் செய்த வழக்கு எண்.3/2011 வழக்கின் பிராது, சம்மன்,

நீதிமன்ற அமினா எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அதனை என் வழக்கறிஞரிடம் கொடுத்து எனது எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன். வாதியின் பிராதை எனது வழக்கறிஞர் என்னிடம் படித்து காண்பித்துதான் எதிர்வழக்குரை தயார் செய்தார். வாதி பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விபரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.9—ல் அது எனது குடும்பத்திற்கான பாக பத்திரம் என்றும், அதில் வழக்குச் சொத்து இடம் பெறவில்லை என்றால் சரிதான்.

எங்களுக்கு உரிமையில்லாத சொத்திற்கு இராமலிங்கத்திற்கு பி.வா.த.சா.ஆ.15 ன் மூலம் நாங்கள் கிரையம் எழுதியது செல்லாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் சர்வே எண்.321/1 ஏ—வின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 ஏக்கர், 58 செண்ட் ஆகும். மேற்படி 10 ஏக்கர், 58 செண்டில் யார் யாருக்கு, எவ்வளவு விஸ்தீரணம் என்றும், எந்த பட்டா எண்ணில் உள்ளது என்றும், பட்டாதாரர் யார் என்றும் எனது எதிர்வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த பி.வா.த.சா.ஆ.2—ல் கூட்டு பட்டாவாக முருகன் நாயக்கர் மகன் கேசவன் நாயக்கர், கணபதி நாயக்கர் மகன் கந்தசாமி நாயக்கர், கந்தசாமி நாயக்கர் மகன் கேசவன் நாயக்கர் ஆகிய மூவர் பெயர்களில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் கூட்டு பட்டாவாக வைத்ததுபோல், வாதிகளும் கூட்டாக வைத்துள்ளார்கள் என்றும் நான் என்னுடைய சொத்திற்கு மட்டுமே வரியை செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கேவசன் என்பவருக்கு ராமசாமி நாயக்கர் 25.03.1987 தேதியில் எழுதிய உயில் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராமசாமி நாயக்கரையும் எனக்கு தெரியும்.

வா.த.சா.ஆ.3 காலத்திற்கு முன்பும், காலத்திற்கு பின்பும் வழக்குச் சொத்து வாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. ராமசாமி நாயக்கருக்கு அய்யாதுரை நாயக்கர் பத்தியம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

வா.த.சா.ஆ.6—ல் கொளஞ்சி என்கிற நாராயண சாமிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான், அவர்களுக்கு பாத்தியமான சொத்தைதான் எழுதிக்கொடுத்தார்கள். வா.த.சா.ஆ.7 கூட்டு பட்டாவாக உள்ளது என்றும், அதற்கு எதிராக நான் கட்சி நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

வா.த.சா.ஆ.8 12.08.1980—ல் ராமசாமி நாயக்கர், கந்தசாமி நாயக்கருக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.8 ஐ நான் படித்து பார்க்கவில்லை. எனது வழக்கறிஞரும் என்னிடம் சொல்லவில்லை. மேற்படி பத்திரத்தின் நான்கெல்லை,

வாதியின் வழக்கை உறுதிப்படுத்துகிறது என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தின் 15.07.1972 –ல் பதிவு கிரைய பத்திரப்படி வையாபுரி நாயக்கர், ராமசாமி நாயக்கருக்கு 17 செண்ட் எழுதிவைத்தார் என்றும் வாதியின் தந்தை கந்தசாமி நாயக்கருக்கு பூர்வீகமாக 16 செண்ட் உள்ளது என்றால் சரியல்ல. 34 செண்ட், 25.03.1987 ன் உயில்படி வாதியின் தாத்தா ராமசாமி நாயக்கர், வாதி கேசவனுக்கு எழுதிக்கொடுத்தார் என்றும் மொத்தம் 47 செண்ட் வாதி குடும்பத்திற்கு பாத்தியமானது என்றால் சரியல்ல.

வாதியின் குடும்பத்திற்கு எதிராக என்னால் எதிர்நிலை பாத்தியம் கோர இயலாது என்றால் சரியல்ல. எதிர்நிலை பாத்தியம் கொண்டாடுவதற்கு சொத்து யாருக்கு உரிமை என்பது தெளிவாக குறிப்பிட வேண்டும் என்றும், அந்த நபருக்கு எதிராக வெளிப்படையாவும், தொடர்ச்சியாகவும், நிராட்சிபனையாகவும், நான் அனுபவித்து வந்ததை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும், அந்த வகையில் நான் எதிர்நிலை பாத்தியம் நிரூபிக்கவில்லை என்றும் அதனால் என் வழக்கு தள்ளுபடிச்செய்ய வேண்டும் என்றும் என்றால் சரியல்ல.

நான் வாதிக்கு உரிமையில்லை என்று சொல்லி யாருக்கு உரிமையுள்ளது என்பதைனை இந்த நீதிமன்றத்தில் இன்று வரை வெளிபடுத்தி காட்டவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஒரே நோக்கம் வாதியின் சொத்து, வாதியின் குடும்பத்திற்கு கிடைக்க கூடாது என்றும், வழக்கை தள்ளுபடி செய்துவிட்டால், வழக்கு சொத்தை அபகரித்துவிடலாம் என்ற நோக்கத்தோடு நான் உள்ளேன் என்றும், அதனால் தான் நான் தப்புகட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப் படி வாதிக்கு தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.**

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.04.30 15:08:30 +0530

Principal District Munsif,(F.A.C)
Tittagudi.